# திருச்சிராப்பள்ளி ஸ்ரீ ஐயப்ப சங்கம்

## அப்பா கட்டுரைகள்


| வரிசை எண் | தலைப்பு | போர்டு எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | அப்பாவின் சோகங்கள் வெளி வருவதில்லை | 2 |
| 2 | பாசமிகு அப்பா | 2 |
| 3 | மகளைப் பெற்ற அப்பாக்களுக்கு சமர்ப்பணம் | 2 |
| 4 | அப்பாவின் தியாகம் | 2 |
| 5 | பெண் குழந்தைகளுக்கு ஏன் அப்பாக்களை பிடிக்கிறது? | 2 |
| 6 | கணவன் என்றால் | 3 |
| 7 | அப்பா அடுத்த பிறவிலும் உனது மகளாகவே பிறக்க வேண்டும் | 3 |
| **போர்டு எண்ணிக்கை மொத்தம்** | | 16 |

# அப்பாவின் சோகங்கள் வெளி வருவதில்லை !

1. முன்சீப் தேர்விற்கு வந்த ஒரு பெண்ணிடம் "நீங்கள் தேர்வு செய்யப்பட்டு முன்சீப் பதவி ஏற்கிறீர்கள் என்று வைத்துக் கொள்வோம். நீதிமன்றத்தில் அமர்கிறீர்கள். ஒரு பெரிய வழக்கறிஞர், கப்பல் போல ஒரு காரில் வருகிறார். சுற்றி அவருடைய இளையோர் படை. உங்களுக்குத் தெரியும். உங்கள் ஒரு மாதச் சம்பளத்தை விட, ஒரே நாளில் அவர் வாங்கும் தொகை அதிகம் என்று. அப்பொழுது உங்களுக்கு என்ன தோன்றும்? இந்த வேலைக்குப்போய் வந்து விட்டோமே என்றா?"

அந்தப் பெண்ணின் கண்களில் கோபம் கலந்த கண்ணீர் மின்னியது.

"மேடம், என் அப்பா நான் நீதித்துறைக்கு வந்து சிறப்பாகப் பணியாற்ற வேண்டும் என்று ஆசைப்பட்டார். அவர் ஒரு போலீஸ் கான்ஸ்டபிள். அரசாங்க சம்பளத்திற்கு மேலே ஒரு ரூபாயைக்கூட அவர் கை தொட்டது கிடையாது. என்னையும், என் சகோதரிகளையும் நன்றாகப் படிக்க வைத்தார். எனக்கு எப்படி மேடம் அப்படியெல்லாம் தவறான எண்ணம் தோன்றும்? என் அப்பா அப்படி என்னை வளர்க்கவில்லை !"

சபாஷ் அப்பா! இந்த அப்பா நன்னெறியில் வாழ்ந்து காட்டியுள்ளார்.

2. இன்னொரு பெண், இன்னொரு தேர்வு, இன்னொரு கேள்வி.

"உங்களுடைய ஆதர்ச நபர் யார்? இவர் மாதிரி தான் வாழ வேண்டும். இவர் அறிவுரைதான் என் மந்திரம்.. இப்படி..?"

"என் அப்பா"

"வெரிகுட்.."

"அவர் ஒரு தொழிற்சாலையில் வேலை செய்கிறார்."

“ம்ம்”

என் அப்பா, தன் வேலையைக் கவனத்துடன் கருத்தாய் செய்வார். என்னிடம், இங்கு வருவதற்கு முன் சொன்னார்: “உனக்கு இந்த வேலை கிடைக்க என் வாழ்த்துக்கள். அப்படிக் கிடைக்கவில்லை என்று வைத்துக்கொள். கார்ப்பரேஷனில் தெரு கூட்டும் வேலை கிடைத்தால் உன்னை விட சிறப்பாக யாரும் அந்த வேலையைச் செய்ய முடியாத அளவிற்கு நீ செய்ய வேண்டும், இதை நீ மறக்கக்கூடாது.”

சபாஷ் அப்பா! செய்யும் தொழிலே தெய்வம் என்று பெண்ணுக்கு உணர்த்தி விட்டீர்கள் !

3. அம்மா அன்பைக் காட்டுவது போல அப்பாவால் முடியாமல் போகலாம். அதற்குப் பல காரணங்கள். உடல் ரீதியாக, மனோதத்துவ ரீதியாக இருக்கலாம். இதனாலேயே பெற்றோர்கள் போட்டியில் அம்மாக்கள் சூப்பர் ஸ்டார் கோப்பையைப் பெற்று விடுகிறார்கள். அப்பாக்கள் குறைந்தவர்கள் இல்லை என்பதைக் காட்டத்தான் திருச்சிராப்பள்ளியில் ஒரு அப்பா பெண்ணுக்குப் பிரசவம் பார்த்தார். அவர் நான் தந்தை மட்டுமல்ல.. தாயுமானேன் என்று உலகத்திற்குக் காட்டினார்.

எவ்வளவு தந்தைகள் நிலத்தை விற்று குழந்தைகள் படிக்க வேண்டுமென்று தங்கள் வாழ்க்கை அந்தஸ்தைக் குறைத்துக் கொள்கின்றனர். இந்த வாழ்க்கையின் குரூர நெரிசலில் கசங்கிக் குனிந்து ஒடுங்கிப் போகிறார்கள்.

ஆண்கள் அழுவதில்லை. அதனாலேயே அவர்களுடைய சோகங்கள் வெளி வருவதில்லை.

★ ★ ★

# பாசமிகு அப்பா

தனது அருமை மகளின் திருமணத்திற்குப் பின் பெண்ணின் தந்தைக்கு நேரும் உணர்வுப்போராட்டம் சொற்களில் அடங்காதது. அவ்வாறாக உணர்ச்சி வசப்பட்ட ஒரு தந்தையின் மிகவும் உருக்கமான யதார்த்தமான இயல்பான எண்ணங்கள் இதோ:

இந்த உரையை, 'எனது மகளின் புதிய குடும்பத்தினரே!' என்று உங்களை வரவேற்று ஆரம்பிக்க வேண்டும் என்றே நினைத்தேன். ஆனால், அது பொருத்தமாக இருக்காது என்பதால் கடைசி நிமிடத்தில் அதை தவிர்த்து விட்டேன். அவள் எப்போது திருமண பந்தத்தில் இணைந்தாளோ, அப்பொழுதே உங்கள் குடும்பத்தைச் சேர்ந்தவளாகி விட்டாள். அதில் எனக்கு எவ்வித வருத்தமும் இல்லை. இன்னும் சொல்ல வேண்டும் என்றால், அவள் உங்கள் குடும்பத்தினருக்கே எப்போதும் எதிலும் முன்னுரிமை அளிக்க வேண்டும் என்றே நான் விரும்புகிறேன்.

எனது மகளை திருமணம் செய்து கொடுத்து விட்டேன். இனி, இளைப்பாற விரும்புகிறேன். அதை அனுபவிக்கத் தயாராகி விட்டேன். ஆனால், அதற்கு நீங்கள் அவளை மகிழ்ச்சியாக வைத்துக்கொள்ள வேண்டும்.

நான் எதிர்பார்ப்பதை விட நீங்கள் அவளை மகிழ்ச்சியுடன் வைத்துக் கொள்வீர்கள் என நான் நம்புகிறேன். அவள் என் வீட்டில் துள்ளித் திரிந்ததை விட உங்கள் வீட்டில் மகிழ்ச்சித் துள்ளளோடு இருப்பாள் என நம்புகிறேன். இருந்தாலும், எல்லா சராசரி தந்தையைப் போலவும் நான் இதை திரும்பத் திரும்ப் சொல்கிறேன். தயவுசெய்து அவள் மகிழ்ச்சிக்கு குறை ஏதும் இல்லாமல் பார்த்துக்கொள்ளுங்கள்.

அவள் எப்போதுமே எனக்கு பாரமாக இருந்ததில்லை. இனியும் ஒரு போதும் பாரமாகக் கருத மாட்டேன். ஏனெனில், என் சுவாசம் இயல்பாக இருப்பதற்கும் என் இதழ்களில் புன்னகை பூப்பதற்கும் காரணம் அவளே. அவ்வாறு இருந்தும் அவளை நான் திருமணம் செய்து கொடுக்கிறேன். ஏனென்றால் அது ஓர் இயற்கை நியதியாக இருக்கிறது. கலாச்சாரத்துக்குக் கட்டுப்பட்டு மட்டுமே அவளை உங்கள் வீட்டுக்கு அனுப்பி வைக்கிறேன். என் வீட்டின் மகிழ்ச்சிப் பேழை உங்கள் வீட்டில் ஒளி வீச வருகிறது. எனது உலகத்தை உங்களுக்குத் தாரை வார்த்துத் தருகிறேன். அந்த உலகம் என்றென்றைக்கும் அழகாக இருப்பதை நீங்களே உறுதி செய்ய வேண்டும்.

கூட்டிக்கொண்டு போய் வைத்து பராமரிக்க முடியாது. யாராவது ஒருவர் வரலாம்' என்றான். அப்படி நான் மூத்த மகன் வீட்டிற்கும், மனைவி வேறொரு மகன் வீட்டிற்கும் சென்றோம். 50 வருடங்கள் ஒன்றாக வாழ்ந்த மனைவியை பிரிந்து தனிமையில், பல நாட்கள் அழுதிருக்கிறேன்.

மனைவியின் நினைவுகள் எப்போதும். அவளிடம் இரண்டு வார்த்தை கூட பேச முடியாமல் அழுதிருக்கிறேன். இறுதியில் என் மனைவி இருக்கும் ஊருக்கு சென்றேன். என் மனைவியிடம் சொன்னேன். 'நாம் வேறு எங்காவது போய் விடலாமா?' என்றேன். மனைவியும் அழுது கொண்டே சம்மதித்தாள். நாங்கள் பெற்று வளர்த்து ஆளாக்கிய பிள்ளைகளை விட்டு வெளியே வந்து ஒரு வருடமாகிறது.

நான் குழந்தைகள் விளையாடும் பொம்மைகளை நடந்தே விற்கிறேன். தினமும் 80 ரூபாய் முதல் 100 ரூபாய் கிடைக்கும். எப்போது வேண்டுமானாலும் நான் இறந்து போகலாம். ஏன்? நான் நடந்து கொண்டிருக்கும் போதே கூட மரணம் வரலாம். அதனால், அந்த 100 ரூபாயில் கொஞ்சம் மிச்சம் பிடித்து சேமிக்கிறேன். அது எங்கள் மரண செலவிற்கு என் பிள்ளைகளுக்கு அந்தச் செலவு கூட வேண்டாம் என்று அதை மனைவியிடம் கொடுத்து வைத்திருக்கிறேன்.

ஒரு நாள் இந்த பணம் எதற்கு சேமிக்கிறீர்கள்? ' என்று என் மனைவி கேட்டாள்.. நம் மரண செலவிற்கு என்றேன். சத்தமாக கத்தி அழுது விட்டாள். இப்போது என் மனைவியின் பிரார்த்தனை.. அவர் மரணிக்கும் அதே நேரத்தில், எனக்கும் மரணத்தை கொடு சாமி.... என்று அடிக்கடி சொல்கிறாள். என் பிரார்த்தனையும் அதுவேதான் என்று அவர் சொல்லவும், இதைக் கேட்டுக் கொண்டு இருந்த நான் மனதால் நொறுங்கிப் போனேன். 'நீங்கள் இங்கே இருப்பது உங்கள் பிள்ளைகளுக்குத் தெரியுமா?' என்றேன். அவர் 'தெரியாது' என்றார். எனக்கு மனம் கனத்துப் போனது.

நாம் நாகரிகமான உலகில்தான் வாழ்கிறோமா? சாதாரண மக்களிடம்தான் எத்தனை எத்தனை வலிகள் புதைந்திருக்கின்றன?

*******

# மகளைப் பெற்ற அப்பாக்களுக்கு சமர்ப்பணம்..

பிறந்ததும்
ஒரு வெள்ளைத் துணியில்
ஏந்திக் கொடுத்தார்கள்
என் இளஞ்சிவப்புத் தேவதையை..
அதன் மூடிய இமைகளுக்குள்
இரு விழிகள்
அசைவது போலத்தான் இருந்தது
அதுவரையில் என் இதயம்..!

அள்ளிக் கொடுத்தாலும்
ஆறாத மனம்
மகள் கிள்ளிக் கொடுத்ததில்
அடங்கிவிடுகிறது..

ஒவ்வொரு இரவும்
தூங்கும் மகளின் முகம்
பார்த்துக் கொண்டிருப்பேன்
அது தவிர
தியானம் என்று
தனியாக எதுவும்
செய்வதில்லை நான்..!

மகள் கோலம் வரைகையில்
அது முடியும் மட்டும்
நம்பிக்கையோடு
காத்திருக்கின்றன
சில தெய்வங்கள்..
கோலத்திலேயே வாழ்ந்து விட..!

மகள் சாதம் பரிமாறியபோது
தட்டில் கொஞ்சம் சோறும்
நிரம்பி வழியும் சந்தோசமும்
இருந்தது

எனக்குப் பொட்டு
வைத்துவிட்டுப் போனாள்
பின், அதற்கு நேராக
என்புருவங்களை
நகர்த்திக் கொண்டேன்..

மகளின்
பாதங்களால்
நிறைகிறது
என் வீடு

*****

மகள் பிறந்ததும்
முதலில்,
சுண்டு விரல்தான்
பிடித்துப் பார்த்தேன்.
அதன் நினைவாய்
எங்கும், என்
சுண்டுவிரல் பிடித்தே வருகிறாள்..

நட்சத்திரங்களை எண்ணிக்
கொண்டிருந்த மகள்
நடுவிலேயே தூங்கி விட்டாள்
நான் எவ்வளவு சொல்லியும்
இரவு முழுவதும் காத்திருந்தன
நட்சத்திரங்கள்

நெஞ்சில் தான் படுத்திருப்பாள்
அவள் இல்லா நேரத்தில்
பதிலுக்கு தலையணை
கொடுத்துப் போனாள்..
மூச்சுத் திணறியது

பூந்தொட்டித் தண்ணீரில்
நிலா தவறி விழுந்து விட்டதென
காப்பாற்றச் சொல்லி நிற்கிறாள் மகள்
இப்போது அவளுள் தவறி விழுந்த என்னை
அந்த நிலாதான் காப்பாற்றியாக வேண்டும்

நான் அழும்போது
மகள் தன் பிஞ்சுக் கைகளால்
என் கண்ணீர் குளத்தின்
மொத்தத் தண்ணீரையும்
வாரி இறைத்து
வற்ற விடுகிறாள்..

மகள் கோபத்தில் இருக்கும்போது
மிக அருகில் அமர்ந்து விடுவேன்..
சமாதானத்திற்கு தலை நிமிரும்போது
ஆளில்லை என்றால்
பாவம் வாடி விடும்..

கோபித்துக் கொள்ளும் மகளிடம்
மண்டியிட்டு மன்னிப்புக்கேட்பேன்..
தெய்வங்கள் போலில்லை
உடனே மன்னித்து விடுகிறாள் மகள்..!

குவளை நீர் மொத்தமும்
சிந்திவிட்டாலும்
மகள் கொண்டு வந்ததில்
என் தாகம் தீர்ந்தது..

மகள் முத்தமிட்ட எச்சில்
ஈரநினைவாகி விடுகிறது.

# அப்பாக்களின் தியாகம்

அப்பாக்களின் அன்பும் பாசமும் பிள்ளைகள் வளரும்போது தேய்பிறை போல மறைவதாகத் தோன்றும். அதுவே நியதி. ஆனால், அந்த நியதி உண்மையல்ல என்பது பின் வரும் காலத்தில் அப்பிள்ளை தன் மகனை வளர்க்கும் போதுதான் புரியும்.

அப்பா என்றால் திட்டுவதற்கும், அடிப்பதற்கும்தான் என்றே பிள்ளைகள் எண்ணுவதுண்டு. அப்பிள்ளைகள் தவறு செய்தாலும் கட்டி அணைப்பது தாயுள்ளம். தவறை சுட்டிக்காட்டி அன்பையும் அரவணைப்பையும் காட்டுவது தந்தையுள்ளம்.

குழந்தை தவழத்துவங்கும் போது விழும் நொடியில் தாங்கிக்கொள்ள முனைபவள் அம்மா. ஐயோ! என் செல்வத்திற்கு எங்காவது அடிபட்டு விட்டதா என்று தேடி அழுவாள். ஆனால், எதையும் வெளிக்காட்டாமல், உடனே அப்பா சொல்வார், "அவனைத் தூக்காதே.. இரண்டு மூன்று தடவை விழுந்தால்தான் நடக்க பழகுவான்." அம்மா நினைப்பாள்.. என்ன மனிதன் இவர்... பிள்ளை கீழே விழுந்து விட்டது என்று கொஞ்சம் கூட பாசமேயில்லாமல் பேசறாரு. அம்மாகிட்ட வாடா செல்லம்.. என்று அழைத்துக் கட்டி அணைத்துக்கொள்வது அம்மாக்களின் இயல்பு.

இது போன்ற அப்பாக்களின் செயல்களுக்கு ஒரே ஒரு காரணம்தான் இருக்கும். வாழ்வின் ஒவ்வொரு நிலையிலும் துன்பங்களும், இடர்களும் மாறி மாறி வரும். எனவே, இது போன்ற நிலைகளில் மனதை தளர விடாமல் வலிகளைத்தாங்கி திரும்பத் திரும்ப முயற்சி செய்தால் மட்டுமே நம் இலக்கை அடைய முடியும் என்பதை உணர்த்துவதற்காக செய்யும் செயலாக இருக்கும். அனைவரும் உறங்கிய பிறகு யாருக்கும் தெரியாமல் விழுந்த இடத்தில் தடவிப்பார்த்து விட்டு வருத்தப்படுபவர் அப்பா.. 'இன்னும் கொஞ்சம் முயற்சி செய்.. நிச்சயம் வெற்றி பெறுவாய்' என்பது தந்தையின் பாசம்.

அம்மாவிற்கு பிள்ளைகளிடம் ஒரேயொரு முகம் மட்டுமே இருக்கும். ஆனால், அப்பாவிற்கு பல முகங்கள் இருக்கும். அன்பை வெளிக்காட்டாமல் துன்பப்படும் அப்பாக்களின் தியாகமே அப்பிள்ளைகளின் வளர்ச்சிக்குத் துணையாய் நிற்கும். அப்பாக்கள் பலரும் உணர்ச்சியை அடக்கி அவற்றின் கலவைகளாய் இருப்பர்.

இங்குள்ள ஒவ்வொரு பிள்ளைகளுக்கும் அவர்களின் அப்பாதான் கதாநாயகன். அவரிடமிருந்தே பலவற்றைக் கற்கத்தொடங்குகிறோம். அப்பாவின் முதல் எழுத்தை நம் பெயருடன் இணைத்து எழுதும் நாம் அனைவரும் பாக்கியசாலிகள்.. பிள்ளைகளின் வளர்ச்சியில் ஆனந்தமடையும் ஒரே ஜீவனும் அவரே. ஒவ்வொரு அப்பாக்களின் உழைப்பும், பொருளாதாரமும் தன் பிள்ளைகளின் எதிர்காலத்தை நன்கு அமைப்பதிலேயே இருக்கும்.

பிள்ளைகளின் வாழ்வில் பயணிக்கும்போதே அவர்களின் வழிநெடுக வரும் கற்களையும், முட்களையும் அகற்றுவதில்தான் அவர்களின் வாழ்க்கையையே செலவழிக்கிறார்கள். தனக்கென்று எதுவும் சேர்த்து வைத்துக்கொள்வதில்லை. பிள்ளைகளின் படிப்பு, வளர்ச்சி மற்றும் அவர்களின் எதிர்காலத்தைப்பற்றிய நோக்கிலேயே தங்கள் இளமையையும், இன்பத்தையும் விட்டுகொடுக்கின்றனர்.

பிள்ளைகளின் சுதந்திரத்திற்காகவும் கல்விக்காகவும் தன் நிம்மதியைத் தொலைத்து அவமானங்களை ஏற்று உடல், மனச்சோர்வு அடையும் அப்பாக்கள் போற்றப்பட வேண்டியவர்கள். அம்மாவின் அன்பை அவள் முகத்திலும், கண்களிலும் காணலாம். ஆனால், அப்பாவின் அன்பை, அவரின் கண்களிலும், அவரது கை நம் தோள்மீது வைத்து அழுத்தும்போதும் உணரலாம்.

அணைத்துத் தூங்க வைப்பவள் அம்மா. தூங்கும் பிள்ளைக்குத்தெரியாது, பிள்ளையின் பாதத்தில் முத்தமிட்டு தன் கண்ணீரை மனதில் சிந்துபவர் அப்பா. உள்ளத்து உணர்வுகளை மறைத்து அவற்றை வெளிக்காட்டாமல் நம்முன் கண்டிப்பாய் நடக்கும் ஒரே ஜீவன்தான் அப்பா.

பிள்ளைகளின் ஆனந்தத்தில் தன் தூக்கத்தையும் வலிகளையும் தொலைத்து. காலைப் பொழுதில் நிற்க இடமில்லாமல் நெடுந்தூரம் பயணித்து வேலை முடித்து விட்டு பிள்ளை உறங்கும் நேரத்தில் சத்தமில்லாமல் வீட்டிற்கு வந்து தூங்கும் மகனின் தலைமுடியை வருடி விடும் தியாகிதான் அப்பா.

சினிமாவிலும், பொழுதுபோக்குகளிலும் உறைந்து பெற்றோரை மறந்திருக்கும் தருணங்களில், 'பாவம் ரொம்ப வேலை போலிருக்கு.. அதனால்தான் போன் பண்ண முடியலை'ன்னு உன்கிட்ட சொல்லச்சொன்னான் என்று மனைவியிடம் பொய் சொல்பவரே அப்பா.

வலிகளையும், வேதனைகளையும் செய்வதறியாது கண்ணீராகக் கொட்டுபவள் அம்மா. இந்த வேதனைகளைத்தாங்கிக் கொண்டு வயோகத்தில் அமைதியாய் பாசத்திற்கும் அரவணைப்புக்கும் ஏங்கி நித்தம் குழந்தை போல் பிள்ளைகளுக்காக நிற்பவர் அப்பா.

இப்படி பிள்ளைகளின் வளர்ச்சிக்காக தன் வாழ்க்கையையே அற்பணித்து ஆயிரம் மைல்களுக்கு அப்பாலிலிருந்து வாரத்திற்கு ஒரு முறையாவது போன் பண்ணி பேசுவான் என்று வலிகளைத்தாங்கி விழி பார்த்து நிற்பவர்தான் அப்பா.

வாழ்வின் பல நிலைகளில் அப்பாக்கள்தான் பிள்ளைகளுக்கு ஆசானாக இருக்கிறார்கள். பிள்ளைகளின் கற்றல் என்பது அவர்கள் பள்ளிக்குச் செல்வதற்கு முன்பே நம் வீட்டினுள்ளேயே ஆரம்பமாகிறது.

பிள்ளைகள் அப்பாக்களிடமிருந்து – நேர்மை, அமைதி, நியாயக்கோபம், விடா முயற்சி, நேரம் தவறாமை, பிறரை துன்புறுத்தாமல் இருத்தல், பயப்படாமல் தைரியமாக இருப்பது. பணத்திற்காக எதையும் செய்யாமலிருத்தல், பணியை நிறைவுடன் செய்தல், சோர்வடையாமல் தன்னம்பிக்கையுடன் இருப்பது, வலிகளைத் தாங்குவது, தோல்வியைக் கண்டு கலங்காமலிருப்பது, சகிப்புத்தன்மை, பழி-பாவங்கள் செய்யாமலிருத்தல், தவறைத்தட்டிக் கேட்டல் ஆகியவற்றைக் கற்றுக்கொள்கிறார்கள். சிறந்த அப்பாக்கள் எப்படி வாழ வேண்டும் என்று தன் பிள்ளைகளுக்கு சொல்லிக்கொடுப்பதில்லை. மாறாக, அப்படியே வாழ்ந்து காட்டுவர்.

சிறந்த அப்பாக்கள் அடிக்கடி கூறும் வார்த்தைகள்...

"எல்லாம் சரியாப்போகும், நான் இருக்கேன், உன் மேலே நம்பிக்கை இருக்கு, நீ நல்லா வருவே.., உன் பிள்ளையையும் மனைவியையும் நல்லா பார்த்துக்கொள்".

அப்பாக்களின் கண்ணீரையும் தியாகத்தையும் இந்த மண்ணில் பிறந்த ஒவ்வொரு பிள்ளையும் எண்ணிப்பார்க்க வேண்டும்.

*****

# பெண் குழந்தைகளுக்கு ஏன் அப்பாக்களைப் பிடிக்கிறது?

அப்பாக்களுக்கு மட்டும்தான் தெரியும் அந்த உறவின் அற்புதம். குறிப்பிட்ட வயதை எட்டிய பின் ஆண் பால், பெண் பால் நெட்டித்தள்ள அப்பா மகளுக்குள் விரியும் சிறிய இடைவெளி எப்படி விழுந்து எப்படி வளர்கிறது. இதுவரை அவிழ்த்து அறிய முடியாத புதிர் அது. ஆனாலும், எந்தக் காலத்திலும் எந்தக் கணத்திலும் மகள் கண்களில் இருந்து ஒரு சொட்டு கண்ணீர் விழுவதைக் கூட எந்த அப்பாவாலும் தாங்கிக் கொள்ள முடியாது. அப்பாவிடம் உள்ள சின்னச் சின்ன குறைகளையும் தாண்டி பெண் குழந்தைகளுக்கு அப்பாக்களை அவ்வளவு பிடிக்கும். ஏன்?

- நட்பில் துவங்கி கணவன் வரை வந்து காணாமல் போய்விடும் ஆண்களுக்கு மத்தியில், தந்தை மட்டும் எந்த வித மாற்றமும் இன்றி கடைசி வரை உடனிருக்கிறார். பெண் குழந்தைகளின் நம்பத்தகுந்த உறவும் அவரே..!

*****

- பெண் குழந்தைகளை வளர்க்கும் அப்பாக்களுக்கு விரைவில் பொறுப்பும் வந்து விடுகிறது. பெண் குழந்தையின் காது குத்துதல் துவங்கி, தன் மகளின் மகளுக்கு காது குத்து நடத்துவது வரை வரிந்து கட்டிக் கொண்டு களம் இறங்குவதில் அப்பாக்களுக்கே கூடுதல் பொறுப்பு..!

*****

- பெண் குழந்தைகள் சொல்லும் பொய்கள் அப்பாக்களுக்கு கவிதை. அடங்காமல் செய்யும் குறும்புகள் அத்தனையும் ஆசை ஆசையாய் பகிர்ந்து கொள்ளப்பட வேண்டிய வானவில்கள்.

*****

- பெண் குழந்தை சற்றே வயதானவுடன் அப்பா – மகளை தொட்டுப் பேசுவதும் முத்தமிடுவதும் குறைந்தாலும் 'இவர் என் அப்பா' என்ற எண்ணம் பெண் குழந்தைகள் மனதில் வலிமை அடைகிறது.

*****

- பெண் குழந்தைகள் எப்போதும் அப்பா செல்லங்கள். உளவியல் ரீதயாக அது 'எடிபஸ்' தியரியின் இயல்பும் கூட. ஆசையோடு பெண் குழந்தைகள் கெஞ்சிக் கேட்பதை அப்பாக்களால் மறுக்க முடிவதில்லை. பாக்கெட்டில் பைசா இல்லாவிட்டாலும்.

*****

- ஆண்கள் தனது மனைவியின் மீது காட்டும் அன்பை விட மகளின் மீது பொழியும் அன்புக்கு அளவில்லை. தன் காதலின் உயிர் வடிவமாய் மகளை உணர்வதுதான் மேஜிக்கின் பின்னால் ஒளிந்திருக்கும் உண்மை!

- பெண் குழந்தைகளுக்கு முதலில் அறிமுகமாகும் நேர்மையான நண்பன் தந்தை.. அப்பாவோடு எதையும் பேசலாம், எதுவும் கேட்கலாம் என்ற கட்டுப்பாடற்ற நட்பும், பாதுகாப்பும் ஆணைப்பற்றிய நம்பிக்கையை ஆழமாக விதைக்கிறது.

*****

- தன் குழந்தை சமூகத்தில் நல்ல பெயர் எடுக்க வேண்டும் என்ற அம்மாக்களுக்கு கண்டிப்பின் வழியாகத் தான் எதையும் சொல்லத் தெரியும். துன் மகளின் மீது அப்பாக்கள் வைக்கும் அதீத நம்பிக்கையே அவளது தவறுகளையும் ரசிக்க வாய்ப்பளிக்கிறது.
என் மகள் எதையும் ஜெயிப்பாள் என்ற நம்பிக்கை அத்தனை அப்பாக்களின் உள்ளங்கைகளிலும் ஒளிந்துள்ளது.

*****

- எப்போதும் எதிர்காலத்தைப் பார்த்தே பயப்படும் அம்மாக்களுக்கு மத்தியில் நிகழ் காலத்தில் வாழ சொல்லித்தருவது அப்பாக்களின் இயல்பு. எந்தப் பிரச்னைகளும் பிராக்டிகலாக தீர்வு காணும் அப்பாக்களே பெண் குழந்தைகளின் சிறந்த ரோல்மாடல்களாக மாறிவிடுகின்றனர்.

*****

- திருமணத்துக்கு பின்னரும் மகள் மீது தன் மருமகன் சுமத்தும் எந்தக் குற்றச் சாட்டையும் அப்பாக்கள் ஏற்றுக் கொள்வதில்லை. தன் மகள் எதைச் செய்தாலும் சரியாகத்தான் இருக்கும் என்ற நம்பிக்கையில் நம் அப்பாக்களை எந்தக் காலத்திலும் அசைக்க முடியாது.

*****

- பெண் குழந்தைகள் தன் வாழ்வில் சந்திக்கும் முதல் ஆண் அப்பாதான். ஒரு ஆண் எப்படி இருப்பான் என்பதையே பெண் குழந்தைகள் அப்பாவின் குணங்களின் வழியாக கற்றுக்கொள்கின்றனர். பெரும்பாலான பெண் குழந்தைகள் அப்பாக்களை அப்படியே பிரதிபலிக்கும் ஜெராக்ஸ் காப்பிகளாக மாறிவிடுவதும் இப்படித்தான்.

*****

- நடை, உடை, பேச்சு, விருப்பம் என அப்பாவின் பழக்கங்கள் சில பெண் குழந்தைகளுக்கும் ஒட்டிக் கொள்ளும். என் பொண்ணு அவ அப்பா மாதிரி என்று சொல்லிக் கொள்வதில் அத்தனை அம்மாக்களுக்கும் பெருமை

*****

# கணவன் என்றால்...

ஒரு திருமண மண்டப வாசலில் ஒரு இளம் தம்பதிக்குள் சின்ன வாக்குவாதம்.

கணவனை உள்ளே அனுப்பி விட்டு வாசலில் போடப்பட்ட நாற்காலியில் அமர்ந்த அந்த நவ யுக மனைவியை கவனித்த 65 வயது மதிக்கத்தக்க பாட்டி அந்தப்பெண்ணை அணுகி, "மகளே! நான் கேட்பதைத் தவறாக எண்ணிக் கொள்ளாதே..!!! ஏன் உன் கணவனைக் கடிந்து கொண்டாய்?"

ஒன்னுமில்லை ஆண்டி, இது என் கணவரது தங்கையின் திருமணம். நானும் கூட வந்து நிற்கணுமாம். எல்லா நிகழ்ச்சியிலும் பங்கெடுக்கணுமாம்... வீட்டுக்கு ஒரே பையன் என்றாலும் இவரை இவர் வீட்டாரே மதிப்பதில்லை. இதிலே என்னைய வேறு கூப்பிடுறார்!. பெண் என்றால் அடிமையா என்ன..? கணவன் செல்லும் இடமெல்லாம் செல்வதற்கு... எனக்கே அசதியா இருக்கு... இந்த ஆம்பளைங்களே இப்படிதான் ஆண்டி, தன்மானம் இல்லாதவர்கள். சும்மா கடுப்பேத்திகிட்டு.."

முதியவள் சிறு புன்னகையோடு..

"மகளே.. முன்பெல்லாம் நான் எங்கே போனாலும் என் கணவனோடுதான் போவேன்....!!!. ஆனால், இப்ப அவங்க இறந்து 8 மாசமாச்சி. எங்க ரெண்டு பேருக்கும் ஏறக்குறைய ஒரே வயசு.. ரெண்டு பேருக்குமே விவசாயமே தொழில். வயதும் 65ஐ கடந்து விட்டேன்...!!!. காடு தோட்டமெல்லாம் இரு மகன்களுக்கும் பிரித்து கொடுத்து விட்டு, ஒரே மகளுக்கும் கொஞ்சம் காசு, பணம், நகைன்னு கொடுத்து விட்டு... பிறகு ஒன்னாவே ஊர்லே எல்லா புண்ணியஸ்தலத்துக்கும் போனோம்... எங்களோட 2 பிள்ளைகளும், ஒரு மகளும் கல்யாணம் பண்ணி தனித்தனியா இருக்கிறதாலே.. நாங்க தனியா எங்க வீட்ல இருந்தோம்... என் கணவருக்கு துரதிர்ஷ்டவசமா Sugar, BP நோய்கள் இருந்திச்சி...

தினமும் மருந்து சாப்பிடணும். அவங்க அவ்வளவு திடகாத்திரமா இல்லாததாலே நான்தான் அவங்களை முழுமையா கவனிச்சிகிட்டேன்..! இப்ப அவங்க இல்லை..!

நான் ரொம்ப தனிமையை உணர்கிறேன். என் பகல்கள் ரொம்ப நீளமாயிடுச்சி. இரவுகள் ரொம்பவும் வெறுமையாயிடுச்சு..!!

அவங்களோட ஒவ்வொரு பொருளும் அவங்களை எனக்கு நினைவுபடுத்திகிட்டே இருக்கு...!

அவங்க சாப்பிட்டு முடிக்காத மீதமுள்ள மருந்துங்கக்கூட என்னை கவலைப் படுத்துது...! அவங்க போன் நம்பர் இருக்கு...! ஆனால் நான் அழைச்சா இனி பேச மாட்டாங்க..

முன்னே என் படுக்கையிலே ஒரு பக்கம் நானும் மறுபக்கம் அவங்களும் படுத்திருப்போம்...!

இப்ப நான் அதே படுக்கையிலே நடுவில் தனியா படுத்திருக்கேன்..!

சமையல்ன்னு பேர்ல எதையோ பண்றேன்..! வாய்க்கு ருசியா சமைச்சு பகிர அவங்க இல்லை..!"

விழியோரம் நீர் தேங்க.. "அதான் மகளே, அவங்க இருக்கும்போதே அவங்களை அதிகமாக நேசிக்கணும்...! அதிகமா போற்றணும்...!! கணவனின் வெற்றியோ, தோல்வியோ, பெருமையோ அவமானமோ, லாபமோ நஷ்டமோ மனைவிக்கு அனைத்திலும் சம பங்கு உண்டு..! தன் மனைவி தன்னுடன் தோளோடு தோள் கொடுத்து நிற்காத எந்த கணவனுக்கும் ஏற்படும் அவமானமும் தலை குனிவும்... வேறெந்த அவமானத்தையும் விட அவனை அதிகம் காயப்படுத்தும்...! மிகவும் வேதனைப் படுத்தும்..! எங்கு போனாலும் என் கணவர் முன்னே சென்று எனக்கு இடம் பிடித்து தருவார்... பஸ்ஸில் ஏறும் போது, விழாக்களில், விருந்துகளில் எனக்கு முன்பே ஓடி சென்று எனக்கு இடம் பிடித்து உட்கார வைப்பார். இல்லா விட்டால் ஏதாவது எனக்கு வசதியாக ஏற்பாடு பண்ணி தருவார்!.

பிரயாணம் செய்யும் போது நான் அசந்து தூங்கி விடுவேன்...! அவரோ ஒரு நிமிடம் கூட கண் அசர மாட்டார். பலமுறை 8 மணி நேரம் 12 மணி நேரம் அவசர பயணத்தின் போது பஸ்ஸில் இடம் கிடைக்காமல் என்னை மட்டும் உட்கார வைத்து விட்டு பாதுகாப்பிற்காக பக்கத்திலேயே கம்பியை பிடித்து நின்று வந்திருக்கிறார்..!

இன்னிக்கு தினமும் என் கணவரின் போட்டோவுக்கு மாலை போடுகின்றேன். எனக்காக எல்லாத்தையும் தயார் செய்த நீங்க முன்னாடி போயிட்டீங்களே..? இதோ நான் பின்னாலேயே வந்துகிட்டு இருக்கேன்னு சொல்வேன்..

சரி மகளே..! நான் வர்றேன் என்று புறப்பட்ட முதியவளை வைத்த கண் வாங்காமல் பார்த்திருந்தாள் அந்த இளம் மனைவி..!

என்ன நினைத்தாளோ மண்டபத்திற்கு உள்ளே சென்று தன் கணவனை தேட ஆரம்பித்தாள்...!!!

ஆம்.. நம் மனைவிதானே.. எப்படி நடந்தாலும் பரவாயில்லை என கணவனும், நம் கணவன்தானே எப்படி பேசினாலும் பரவாயில்லை என மனைவியும் எண்ண வேண்டும்..!

புதிதாக அறிமுகமாகும் ஒருவரிடமே.. "எப்படி இருக்கின்றீர்கள்? நலமாக உள்ளீர்களா? என்கிறோம்.

இடையில் இருமுகிறோம், தும்முகிறோம் I am sorry sir... என்கிறோம்.!

பேச்சிக்கிடையில் ஒரு தொலைபேசி அழைப்பு வருகிறது. உடனே “Excuse me sir” சொல்கிறோம்.

அந்த நபரைச்சந்தித்தே 10-20 நிமிடம்தான் ஆகியிருக்கும். அதன் பின் அவரைச் சந்திப்போமா என்றே தெரியாது.. ஆனாலும் எவ்வளவு மரியாதை தருகிறோம்?”

வாழ்நாள் முழுவதும் நம்மோடு வாழ்கிற கணவனை மனைவியும், மனைவியை கணவனும் மதிக்கிறார்களா? 100க்கு 50 விழுக்காடு இல்லைதான்.

கணவனின் கரிசனையை, திறமைகளை பாராட்டுறதுமில்லை, அசதியாக அலுவலக வேலை முடிந்து வீடு திரும்பும் கணவன்கிட்ட, “ஏங்க.. ரொம்ப வேலையா.. காலையிலேர்ந்து நான் உங்களை ரொம்ப மிஸ் பன்னிட்டேனுங்க”னு மனைவியும் சொல்றதில்லை.

மனைவியும் ஓய்வாகவோ.. களைத்தோ அமர்ந்திருக்கையில் “இன்று வீட்டு வேலை அதிகமா...” என கனிவான பார்வையோடு கேட்கும் கணவர்களும் 50 விழுக்காடே.

இதெல்லாம் சொல்லணும்..!! அப்படி ஒருத்தரோட உணர்வை இன்னொருத்தர் புரிஞ்சிகிட்டு வாழ ஆரம்பித்தால்... வாழ்க்கை இனிக்கும்...!! ருசிக்கும்...!!!

மருத்துவமனையிலோ.. படுக்கையிலோ இருந்தால் கூட இருந்து கவனிப்பவர்... கணவனோ அல்லது மனைவியோதான்..

சுமார் ஒரு மாத காலம் மருத்துவ மனையில் படுக்கையாக இருந்தால்.. முதல் ஒருவார காலம்... பார்க்க வரும் உறவுகள் மற்றும் சொந்தங்கள்... பின்னர் படிப்படியாக குறைந்து விடும்.

பின்னர் மகளோ.. மகனோ.. நெருங்கியவர்கள் மட்டுமே.. வந்து போவார்கள்..

இறுதியில் கணவன் - மனைவி மட்டுமே ஒருவருக்கொருவர் துணையாக இருப்பர்.

இறுதியாக ஒன்று மட்டும் நிச்சயம்...

நம்முடைய உறவு... நட்பு... குலம்... சாதி... பங்காளி.... பகையாளி.... இனம்... சனம்... பணம்.... முதலாளி... தொழிலாளி... கட்சிக்காரன்... எல்லாமே கூடிக் கலையும் காக்கா கூட்டமே..

ஆக கணவன் - மனைவி மட்டுமே ஒருவருக்கொருவர் இறுதி நாட்களில் துணையிருப்பர்.

*****

# அப்பா, அடுத்த பிறவியிலும் உனது மகளாகவே பிறக்க வேண்டும்!

வெளியூருக்கு பரபரப்பாகக் கிளம்பிக் கொண்டிருந்தார் அப்பா. மிகச் சின்ன விஷயத்திற்காக என்னை அடித்துவிட்டார்.அடியினால் ஏற்பட்ட உடல் வலியை விட. அப்பா அடிக்கலாமா என்கிற மனவலி அப்போது அதிகம்.. அழக் கூடாது என்கிற வைராக்கியத்தில் கண்ணில் தளும்பிய கண்ணீரைக் கட்டுப்படுத்திக் கொண்டேன். ஊருக்குப் போய் கொண்டிருக்கும்போதே ரயிலில் ஒரு கவிதை எழுதி அப்பா அனுப்பியிருந்தார்.என் வாழ்வில் அது ஒரு பொக்கிஷம்.

அன்பு மகளே! அருமைப் பொருளே !
அன்றொரு மாலை அப்பா அடித்தேன்
இன்று வரையில் இதயம் வலிக்க
என்னை நானே கூண்டில் அடைத்தேன்.
குட்டித் தொலைத்தேன் கோபம் பொங்கிட
கொட்டிட அருவி எட்டிப் பார்த்தது.
கெட்டிக்காரி கண்ணில் அடைத்தாய்
முட்டாள்தனத்தை உடனே உணர்ந்தேன்
ஒற்றை மனிதன் உலகம் முழுவதும்
சுற்றி வருகிறேன் உதவியே இன்றி
பலர் பலர் செய்யும் வேலைகள் யாவும்
ஒருவனே செய்யும் ஓயா உழைப்பு
பயணம் செய்தல் பணத்தை ஈட்டல்
படித்தல் எழுதுதல் பேச்சில் சிறத்தல்
என்று பல் எண்ணமே தின்கிறபடியால்
களைத்துப் போனேன் ஒவ்வொரு நாளும்
இத்தனை அழுத்தம் இருக்குமானால்
புத்தரும்கூட போரில் குதிப்பான்
அத்தகு நிலையில் அன்று நடந்தது
இத்தகு தவறு இனிமேல் இல்லை
மலரின் தலைமேல் நெருப்பை வைக்கும்
நிலைமைகள் இனிமேல் நிச்சயம் இல்லை
அன்னை சக்தி அருள்வாய் மகளே
கண்ணைத் துடைத்திடு காரியம் செய்திடு!

என்கிற அப்பா கவிதையை, அடித்த அன்று அழாத நான் படித்த அன்று கதறி அழுதேன்.

சின்ன வயதில் எனக்கொரு ஏக்கம் உண்டு.சினிமாவிலும் சிறு கவிதையிலும் வருகிற மாதிரி அப்பா பாசமழை பொழியவில்லையே என்று வருத்தப்படுவேன். வருத்தம் தாண்டி கோபமேகூட உண்டு. அப்பா. பட்டும் படாமலும்தான் பாசம் காட்டுவார். இதற்கு அப்பா சொன்ன காரணத்தை என்னால் மறக்க முடியவில்லை. திருமதி. இந்திராகாந்தி கடைசி வரை நேருவின் மகளாகவே உணரப்பட்டார். ஒருபோதும் ஃபெரோஸ் காந்தியின் மனைவியாக ஒளிவீசவில்லை. அளவுக்கு மீறி அப்பாவின் ஆளுமைக்குள் மகள் வந்துவிட்டால், அவளது குடும்ப வாழ்வு வீணாகிவிடும். புரிந்துகொள்! என்று அப்பாவிடமிருந்து கறாராகப் பதில் வந்தது.
இது மிகவும் யோசிக்க வேண்டிய விஷயம்!

அதேபோல் என்னைவிட என் தங்கைமீது அப்பா அதிக பாசம் காட்டுவது போல அப்போது எனக்குத் தோன்றும். என்னை அதிகம் கண்டித்து வளர்த்ததாக ஒரு நினைப்பு. என் மனம் கனத்தபோது, உனக்கு இரண்டு பிள்ளைகள் பிறந்தால் மட்டுமே இதன் விளக்கம் புரியும் என்று அப்பா பதில் சொன்னார். அதோடு, மகளே. நீ மட்டும் வளர வில்லை. அப்பாவும் வளர்கிறேன். உன்னை வளர்க்கும் முறையில் சில உன்னை பாதிக்கும் போது நானும் உஷாராகிவிடுகிறேன். ஓஹோ. நாம் இப்படிச் செய்திருக்கக் கூடாது என்று என்னை மாற்றிக் கொள்கிறேன்.உன் விஷயத்தில் நடந்த தவறுகள் எல்லாம் அவள் விஷயத்தில் சரி செய்யப்படுகிறது. உங்கள் இருவர் மீதும் அன்பு சமம் என்றாலும், வளர்ப்புமுறை மாறத்தான் செய்யும்! என்பார். பிள்ளை மட்டும் வளர்வதில்லை. பெற்றோரும் வளர்கிறோம் என்ற வரிகள் அப்பாவின் அனுபவப் பிழிவு.

எக்காரணத்தை முன்னிட்டும் (தங்க) நகைகள் கடன் வாங்கி அணியாதே. கூடுமானவரை விலை உயர்ந்தவற்றை இரவல் கொடுக்காதே. பிறர் உடுத்திய ஆடைகளை உடுத்தாதே உணவு வீணாகிறது என்று சாப்பிடாதே. இவர்களை எப்படி உபயோகப்படுத்திக் கொள்ளலாம் என்று மலினமாக

யோசிக்காதே.. இப்படி அப்பா சொன்ன எத்தனையோ புத்திமதிகள் அந்தந்தப் பிரச்னைகளின்போது நினைவில் மின்னிக்கொண்டே இருக்கும்.பெண் பிள்ளைகள் தங்கள் திறமைக்கேற்ப நிறைய படிக்க வேண்டும்.வேலைக்குப் போகிறார்களோ இல்லையோ,உயர் கல்வி படிக்க பெண் பிள்ளைகள் முன்வர வேண்டும். பொருளாதாரம், குடும்ப அவசியத்திற்கேற்ப வேலை பார்க்கமுயற்சிக்க வேண்டும். சிறுகதை, நாவல் இவை தாண்டி கட்டுரைகள். கனத்தவிஷயங்கள் கவனமாகக் கற்கவேண்டும். சுறுசுறுப்பாகப் பணியாற்றவும், அன்பை முதன்மை அளவுகோலாக வைத்துக் குடும்பம் நடத்தவும் பெண் மக்கள் முடிவு செய்ய வேண்டும். நடிகைகளை முன்னுதாரணங்களாக நினையாமல் வளர வேண்டும். உடை விஷயத்தில் கண்ணியம் என்பதே அளவுகோல்.

ஒரு காலத்திலும் கணவனிடம் அப்பாவை உயர்த்திப் பேசக்கூடாது. அப்பாவுடன் மறந்தும் கணவரை ஒப்பிட்டுப்பார்க்கும் முட்டாள்தனத்தை விட்டுவிட வேண்டும். அப்பாவை நம்பி வாழும் வாழ்க்கை அசட்டுத்தனம். மாறாகச் சொந்தக்காலில், சுயம் அழியாது மகள் வாழ வேண்டும். புகுந்த வீட்டில் தனக்கு ஏற்படும் சிறு சிறு பிணக்குகளைக்கூட தாய் வீட்டில் தகவல் ஒலிபரப்பு செய்வது முட்டாள்தனத்தின் உச்சக்கட்டம்.

ஒரு பெண்ணுக்குத் தாய், தந்தையைவிட கணவன், மாமனார், மாமியார், குழந்தைகள் என்கிற புரிதல் அவசியம். குழந்தைகள் வளர வளர குடும்ப வளையம் என்கிற பூ விலங்கை கொஞ்சம் கொஞ்சமாகக் கழற்றிவிட்டு பிறர் நலப் பணிகள், சமூக அக்கறை உள்ள பொதுப் பணிகள் என்கிற பொன் விலங்கைமாட்டிக் கொள்ள பெண்கள் முன்வர வேண்டும்.

அப்பப்பா.. இப்படி ஒன்றல்ல.. இரண்டல்ல.. வான் மழையாய்ப் பெய்த வாழ்வாதார மழையல்லவா அப்பாவின் அறிவுரைகள்!

அப்பா.. நீ வேண்டுமானால் அடுத்த பிறவி வேண்டாம் என்கிற ஞானஸ்தனாக இருக்கலாம். ஆனால் அடுத்து பிறவியிலும் உன் மகளாகவே பிறக்க விரும்பும் அஞ்ஞானியாக இருப்பதில் எனக்கு எவ்வளவு சந்தோஷம் தெரியுமா? !

(அந்த அப்பாவின் பெயர்: சுகி.சிவம்) மல்லிகை மாத இதழ்: மார்ச் 2016

★ ★ ★